முதலாவது அனைத்துலகத் தமிழியல்

# ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"



ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# நாலாயிரம் திவ்யபிரபந்தங்களில் பண்களும், தாளங்களும்.

**சி. சூரியகுமார்,**
முதுநிலை விரிவுரையாளர்
(இசைத்துறை)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*suriyaskn@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

ஆழ்வார்கள் திருமாலிடம் சிறந்த பற்றுடன் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்காக இசைநயப் பொலிவுடன் பாடிய பாடல்களை நாலாயிரம் திவ்விய பிரபந்தமாக கொகுத்து தமிழுக்கு அருங்கொடையாக வழங்கியுள்ளனர். ஆழ்வார்கள் இறைவனை குழந்தையாகவும், நாயகனாகவும் பாவித்து பல இசைப் பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் சொல்நயமும், பொருள் நயமும், பக்தி நயமும் மிக்கவையாகவும் இனிய பண்களில் பாடுவதற்கு உகந்தவையாகவும் காணப்படுகின்றன. நாயன்மார்கள் போன்றே ஆழ்வார்களும் பண்சுமந்த பாடல்களை இசையோடு கூடியதாக படைத்துள்ளனர். அந்தவகையில் ஆழ்வார்களது பாடல்களில் காணப்படும் இசைச் சிறப்பு பற்றியும் அவர்கள் கையாண்ட பண்கள், தாளங்கள் பற்றி விரிவாக ஆராய்தலினை நோக்மாகக் கொண்டு வரலாற்று மற்றும் விவரண ஆய்வு முறையிலே இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :** இசை, பண்கள், இராகங்கள், தாளங்கள், ஆழ்வார்கள்,

**முன்னுரை**

ஆழ்வார்களால் பாடப்பட்ட நாலாயிரம் திவ்வியபிரபந்த பாடல்கள் அமுதாகக் கொள்ளத்தக்க சொல் மாலைகள். பலவகையான இசைப்பாடல் அமைப்புக்களைக் கொண்டு நாலாயிர திவ்விய பிரபந்தப் பாசுரங்கள் பாடப்பட்டுள்ளன. திருவாசகத்தைப் போல பலவகையான பாடல்கள் காணப்படுகின்றன. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் மரபமைப்பு பாடலில் இசைக் கூறுகள் ஏராளமாக வருவதை காணலாம். இறைப் பற்றாளர்கள் பாடுவதில் வணக்கமும், வழிபாடும் மிகுதியாக காணப்படும். இசை அவர்களுக்கு ஒரு கருவியாக உதவும். பாடலமைப்பில் மரபையும் இசையமைப்பில் நாட்டுப்பற மக்களின் வாழ்க்கையையும் கொண்ட பல பாடல்களை ஆழ்வார்கள் மிக இனிமையாகப் பாடியுள்ளனர். அத்துடன் தேவாரங்களில் பண்கள் காணப்படுவது போல பாசுரங்களிலும் பண்கள், தாளங்கள், இசைக்கருவிகள் போன்றன குறித்துக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆழ்வார்களும், பாசுரங்களும்**

ஆழ்வார்கள் பன்னிருவர் அவர்களில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார்கள் என சிறப்பிக்கப்படுகின்றனர். ஏனெனில் இவர்கள் காரைக்கால் அம்மையாரது சம காலத்தவர்கள். இவர்களைத் தொடர்ந்து நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், மதுரகவியாழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய ஒன்பது பேரும் வைணவ சமய மறுமலர்ச்சிக்கு பல்லவர் காலத்தில் ஊன்றுகோலாயிருந்தனர். அந்தவகையில் பன்னிரு ஆழ்வார்களும், அவர்களால் அருளப்பட்ட நூல்களும் பின்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| பொய்கையாழ்வார் | முதலாம் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி |
| திருமழிசையாழ்வார் | நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் |
| நம்மாழ்வார் | திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி திருவாய்மொழி |
| குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி |
| திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பரிய திருமடல், சிறிய திருமடல், திருவெழுக் கூற்றிருக்கை. |
| தொண்டரடிப்பொடியாழ்வார் | – திருமாலை, திருப்பள்ளியெழுச்சி |
| திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் |
| பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு, திருமொழி |
| ஆண்டாள் | நாச்சியார் திருமொழி, திருப்பாவை |
| மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுதாம்பு (திருமுறை திவ்விய பிரபந்த திருப்பாடல் திரட்டு பக் – 47) |

**பிரபந்தங்களின் சிறப்புக்கள்.**

பன்னிரு ஆழ்வார்களும் வெவ்வேறு தொகைகளில் பாசுரங்களைப் பாடியுள்ளனர். இவர்கள் பாடியதை 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் நாலாயிரம் திவ்விய பிரபந்தமாக தொகுத்தார். இந் நூல் ஆயிரம் ஆயிரம் பாடல்களாக நான்கு தொகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது. திவ்விய பிரபந்தங்கள் இனிய பண், தாளங்களில் பாடப்பட்டவை என்பதற்கு சான்றாக நம்மாழ்வார் அருளிய திருமொழி. “ எண்ணில் சோர்விலந்தாதி யாயிரத்துள் .... (திருவாய்மொழி இரண்டாம் பத்து 6ம் பாடல்) ஆண்டாள் எழுதிய திருப்பாவைகள் அனைத்தும் தெய்வமணம் கமழும் தீந்தமிழ் பாடல்கள் ஆகும். இவை மாணிக்கவாசகரின் திருவெம்பாவையோடு ஒப்பிடத்தக்கவை. திருவெம்பாவை இளமகளிர் ஒருவரை ஒருவர் துயிலெழுப்புவது போன்ற பாவனையிலும், ஆண்டாளது திருப்பாவை இளநங்கையர்கள் ஒருவரையெருவர் துயில் எழுப்புவதோடு கண்ண பெருமானையும் துயிலெழுப்புவது போல பாவனை செய்யப்பட்டுள்ளது. தேவாரப் பாடல்கள் பலவகையான பண்களில் பாடுவதற்குகந்த முறையில் அமைக்கப்பட்டிருப்பதைப் போல திவ்விய பிரபந்தப் பாசுரங்களுக்கும் பண்களும், தாளங்களும் குறிக்கப்பட்டுள்ளது. ஆண்டாள் “இன்னிசையால் சொன்ன மாலை ஈரைந்தும்:”

என்று நாச்சியார் திருமொழியில் கூறியது போல திவ்வியபிரபந்தப் பாசுரங்கள் அனைத்தும் கருத்துச் செறிவும் சந்த அழகும் கொண்டவை. இசையமைப்பதற்கு ஏற்ற முறையில் பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டுப் பாடல்கள் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. கண்ணனைக் குழந்தையாக பாவித்து பெரியாழ்வார் தாலாட்டுப் பாடல்கள் பாடியமையும் இவை தாலாட்டுப் பாடல்கள் மரபையொட்டி பாடலின் இறுதியில் தாலேலோ என்று முடிவதையும் காணலாம். சான்றாக "மாணிக்கங்கட்டி வயிரமிடைக்கட்டி....." (பெரியாழ்வார் திருமொழி 44:1) இப்பாடல்கள் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் (நீலாம்பரி ராகத்தில்) பாடப்படுகின்றன. பூதத்தாழ்வார் பாடிய பக்திப் பாசுரங்கள் 2ம் திருவந்தாதி ஆகும். இவரது திருப்பதிகங்களில் ஈடு இல்லாத இசைவளம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இசையின் உன்னத நிலையை யாவரும் உணரும் வகையில் செய்தது பூதத்தாழ்வாரின் இசைப்புலமையை காட்டுகிறது. ஒவ்வொரு பதிகத்திலும் முதல் பாட்டில் "ஞானத் தமிழ் புரிந்த நான்" என்று குறிப்பிடுவது இவரது தமிழ்பபற்றை வெளிப்படுத்துகிறது. இவரது இசைப் பாடல்கள் சிறந்ததொரு பக்தித் தமிழிசை நூல் என்று கூறுமளவுக்கு அமைந்துள்ளது. இப்பாடல்களில் கையாண்ட உவமைகள் சிறப்பாக அமைவதோடு மட்டுமல்லாமல் இசைநயமுடையதாகவும் விளங்குகின்றது. "யானை தனது இளங்கன்று முன்நின்ற இளமூங்கிலை ஒடித்து அருகில் இருந்த தோனில் தோய்ந்து கொடுக்கும் வேங்கடம் என்பது போன்ற உவமைகள் சிறப்பானவை. பேயாழ்வார் பாடிய 100 வெண்பாக்களும் 3ம் திருவந்தாதியாக அமைந்துள்ளது. செம்மையான நயம், சிறப்பான வர்ணனை போன்ற பாக்கள் இவரது பக்தி ஆழத்தை புலப்படுத்துகின்றது. இவர் ஏனைய ஆழ்வார்களைப் போல் நீரில் குதித்தோ, நெருப்பில் நின்றோ தவம் செய்யாமல் இயல்பான இயற்கை மலர்களைத் தூவி இறைவனை வழிபடும் ஆன்மீக நெறியை வலியுறுத்தியுள்ளார். இறை உணர்வு இசையோடு அமைந்திருப்பது இறைவனது அருள் என கூறுகின்றார். (சுப்பிரமணியன் ச.வே – 2003 பக் - 164)

இனிய இசைநயத்தை வெளிப்படுத்தும் வகையில் 100 வெண்பாக்களைக் கொண்ட நான்முகன் திருவந்தாதியையும் 120 விருத்தப்பாக்களையும் கொண்ட திருச்சந்த விருத்தத்தில் வெண்பா, விருத்தம் முதலிய பாவகைகள் விளங்குவதால் இசை மரபு இங்கு உண்டென கூறலாம். அன்பிலே தங்கி நெஞ்சுருகி உள்ளம் கனிந்தெழுந்த அன்பில் தான் இறைவனை காணமுடியும் என்பது திருமழிசையாழ்வார் கண்ட பக்தி நெறியாகும். தூய அன்போடு இறைவனை உளமுருகி இசையோடு பாடும்போது இறைவனை சேர்வதற்கான வழியும் இனிய இசையும் இவ் உலகுக்கு செல்ல வேண்டிய வழியை காட்டும் என்ற உண்மையின் வெளிப்பாடு இவரது இசைமோகத்தன்மையை வெளிக்காட்டப்படுகின்றது. (அடைக்கலசாமி.எம்.ஆர் 1989 பக்156)

திருமால் பல்லாண்டு வாழவேண்டுமென்று திருப்பல்லாண்டு பாடியவர் அத்தோடு பெரியாழ்வார் திருமொழியையும் அருளியவர் பெரியாழ்வார். திருப்பல்லாண்டு நாள்தோறும் வைணவர்களால் ஓதப்படும் அளவுக்கு இசைவன்மை உடையது. இவரது திருமொழிப் பாடல்கள் பிற்கால பிள்ளைத் தமிழ் பிரபந்த்திறகு வழிகாட்டியதுடன் இனிய இசைநயம் பொருந்தியதாகவும் திகழ்கிறது. பலவகை சந்தங்களும் இனிய இசைநயமும் கொண்ட பல கலிவிருத்தங்களை பாடியிருக்கிறார். பண்ணுடனும் தாளத்துடனும் இவரது பாடல்கள் பாடப்பட்டதற்கு "பண் இன்பம் வரப்பாடும் பத்தருள்ளார்......" "பண்பல பாடிப் பல்லாண்டு இசைப்ப........."

"பண்பகர் வில்லிப் புத்தூர்க் கோன் பட்டர்..." போன்ற பல பாடல்கள் சான்றாக அமைந்துள்ளன. சூடிக்கொடுத்த சுடர்கொடி எனும் சிறப்புப் பெயர் பெற்ற ஆண்டாள் திருப்பாவை, நாச்சயார் திருமொழி ஆகிய நூல்களை இயற்றினார். இவரது பாடல்கள் பண்ணோடு பாடப்பட்டமையை கோதை "இன்னிசையால் சொன்ன மாலை" என்ற பாடல் மூலம் அறியலாம். இனிமை, எளிமை இசையின் வலிமையை கையாண்ட பெரும் இசை மேதை நம்மாழ்வார். இவரது இசைப்பாக்கள் மிகவும் இனிமையானது. இவரது புலமையின் வன்மையை காட்டும் வகையில் 1010 பாடல்களை இயற்றியுள்ளார். ஒவ்வென்றம் இசை ஊற்று என கூறுமளவுக்கு சிறப்பானது இவரது பாடல்கள் பக்தியோடு தமிழ்ப்பற்றும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளது. "பண் ஆர் தமிழ்" என்ற இவரது பாடலில் இருந்து இவரது பாடல்களின் இசை சிறப்பை நோக்கலாம். (அங்கயற்கண்ணி.இ 2000 பக் 77)

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரின் சிறப்பைக் கேட்டு அவர் மீது பேரன்பு கொண்டு அவரை பாடு பொருளாகக் கொண்டு நம்மாழ்வாரின் மீது பாடிய பதிகம்தான் "கண்ணிநுண் சிறு தாம்பு" ஆகும். இவர் நம்மாழ்வார் மேல் கொண்ட பக்தியை எளிமையாகவும், இனிமையாகவும் இசைநயத்தோடு கூறுகிறார். குலசேகர ஆழ்வாரது இசைப் புலமையை இயம்புவதாக 104 பாடல்களைக் கொண்ட பெருமாள் திருமொழி விளங்குகின்றது. திருமால் இருக்கும் இடத்தில் இருந்து தாம் வழிபாடு செய்தால் போதும் எனும் இனிய ஓசையில் இப் பாடல்களை பாடியுள்ளார். "குலசேகரன் இன்னிசையில் மேவி" என்ற பாடல் இவர் பாடல்களின் இசைநத்தை வெளிப்படுத்துகின்றது. (ஸ்ரீசந்திரன்.ஜெ 2004 பக் 130) இதே போன்றே திருமங்கையாழ்வார் இயற்றிய பெரியதிருமொழி, திருவெழுக்கூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறியதிருமடல், பெரிய திருமடல் போன்ற பாசுரங்களும் இசைமரபோடு பேணப்பட்டன. (அங்கயற்கண்ணி.இ 2000 பக் - 88)

**திவ்ய பிரபந்தத்தில் இசை**

திவ்விய பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் பண்ணிசை பற்றி மிக உயர்ந்த கருத்துடையவர்களாக இருந்திருக்க வேண்டும். நான்மறைப் பாடல்களை "பண்ணுாறு நான்மறை" (நாச்சியார் திருமொழி 5:11, 3) என்று ஆண்டாள் சிறப்பித்துப் பாடுகிறா். வண்டுகளின் ஒலியை பெரியாழ்வார் கேட்டு இன்பம் கொள்கிறார். அந்த இன்பத்தில். "பண்தரு வண்டினங்கள்....." (பெரியாழ்வார் 4, 3, 6, 3) என்று சிறப்பிக்கின்றார். இசை துன்பத்திலும் எழுப்பப்படுகின்றது. மனம் வருந்திப் புலம்புவதை புலம்பல் பாடலாக பாடி ஆழ்வார்கள் காட்டுகின்றனர். பிணத்தைப் பாடையிலேற்றி கொண்டு செல்லும்போது துன்பச்சுவை ததும்ப பாடும் பாடலை பெரியாழ்வார் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். "பாடிப் பாடியோர் பாடையி லிட்டு" (பெரியாழ் 4, 5, 8, 2) என்ற குறிப்பு இதனைக் காட்டுகின்றது. இசை தொடர்பான பல கருத்துக்கள் திவ்ய பிரபந்தங்களில் கணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**பண்கள்.**

நாலாயிரம் திவ்ய பிரபந்தங்களில் இயற்பா தவிர்ந்த ஏனைய மூவாயிரம் பாசுரங்களிலும்

மொத்தம் 30 தமிழ்ப் பண்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் சீகாமரம் 18, பழந்தக்கராகம் 15, இந்தளம் 14, நட்டராகம் 13, நட்டபடை 11, நாட்டம் 11, புறநீர்மை 10, தக்கராகம் 09, முதிர்ந்தகுறிஞ்சி 08, கொல்லி 08, பஞ்சமம் 07, தக்கேசி 06, காந்தாரம் 05, பழம்பஞ்சுரம் 05, பாலையாழ் 05, குறிஞ்சி 04, செந்துருத்தி 03, பஞ்சுரம் 02, பியந்தை 02, வியந்தம் 02, அந்தாளிக்குறிஞ்சி 01, கவ்வாணம் 01, குறண்டி 01, கைசிகம் 01, மேகராகக்குறிஞ்சி 01, வியாழக்குறிஞ்சி 01, பழம்பஞ்சுரம் 01, செருந்தி 01, நைவளம் 01, தோடி 01 ஆகிய 30 பண்களில் 167 பாசுரங்கள் இடம்பெற்றுள்ளன.

தேவாரத்திலும், பிரபந்தங்களிலும் பொதுவாக 18 பண்கள் இடம்பெறுகின்றன. இதில் குறிஞ்சி யாழ் என்ற பெரும் பண் (7 சுரங்களைக் கொண்டது) அந்தாளிக் குறிஞ்சி, கொல்லி, கௌசிகம், சீகாமரம், தக்கராகம், தக்கேசி, நட்டபடை, நட்டராகம், பஞ்சமம், பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், மேகராகக் குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி ஆகிய 13 பண்ணியல் திறப்பண்களும் (6 சுரங்களைக் கொண்டது) இத்தளம், காந்தாரம், செந்துருத்தி, புறநீர்மை ஆகிய 4 திறப்பண்களும் (5 சுரங்களைக் கொண்டது) இவ்வாறு மொத்தம் 18 பண்கள் இரண்டிலும் பொதுவாக அமைந்துள்ளன. (பெருமாள்.ஏ.என் 1984- பக் - 400)

நாலாயிர திவ்விய பிரபந்தங்களில் மட்டும் 10 பண்கள் இடம்பெற்றுள்ளது. பாலையாழ், தோடி (விளரிப்பாலை) என்ற இரு பெரும் பண்களும், கவ்வாணம், குறண்டி, செருந்தி, நாட்டம், பஞ்சுரம், பியந்தை, முதிர்ந்த குறிஞ்சி, வியந்தம் ஆகிய 8 பண்ணியல் திறப் பண்களும் மேலும் "நைவளம்" என்ற பண்ணை நட்டபாடைப் பண்ணாகவும், "பழம்பஞ்சுரம்" என்ற பண்ணை "பழம்பஞ்சுரம்" பண்ணாகவும் கொள்ள வேண்டும். இவ்வாறு 30 பண்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் மூவர் தேவார்தில் அமைந்த 24 பண்களில் இடம்பெற்று திவ்விய பிரபந்தங்களில் அமையாத பண்கள் 06. அவை செவ்வழி எனும் பெரும் பண்ணும், சாதாரி, காந்தார பஞ்சமம் என்ற பண்ணியல் திறப் பண்களும், தேவாரத்தில் புதிதாக இடம்பெற்றுள்ள கொல்லிக் கௌவாணம், பியந்தைக்காந்தாரம், யாழ்முரி ஆகியன ஆகும். (அங்கயற்கண்ணி.இ 2000- பக் 88)

**தாளங்கள்.**

தேவாரத் திருமுறைகளைப் பாடுவதற்கென்று தாளங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை. என்றாலும் இன்ன இன்ன பண்ணிலமைந்த பதிகங்களை இன்ன இன்ன கட்டளைப்படி பாட வேண்டும் என்று திருமுறை கண்ட புராணத்தில் விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கட்டளை என்பது யாப்பு வகையாகும். இதனை சந்த வேறுபாடு அல்லது சத்த வேறுபாடு என்று குறிப்பிடலாம். இது எழுத்து, காலம், மாத்திரை, பலம், உச்சரிப்பு முதலியவற்றைக் கொண்டு வரையறை செய்யப்படுவது. இதில் லகுவுக்கு, 1 மாத்திரையும், குருவுக்கு 2 மாத்திரையும் வரும் (தன என்பது – 2லகு, தானா என்பது – 2குரு, தனா என்பது – 1லகு, 1குரு, தான என்பது – 1குரு, 1லகு என்று வரும்) இவ்வாறு ஓசை அடிப்படையில் இந்தக் கட்டளைகள் வகுக்கப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் பாடியுள்ள திருத்தாளச்சதி என்பது வெறும் சொற்கட்டுக்களாக நடனகதியில் அமைந்துள்ளது. இது பிற்காலத்தில் சந்தங்கள் தோன்ற

வழிவகுத்துள்ளது. மற்றபடி தேவாரத்தில் தாளங்கள் என்று எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் நாலாயிரம் திவ்விய பிரபந்தங்களில் பண்களைப் பாடுவதற்குரிய தாளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன இதில் மொத்தம் 7 தாளங்கள் இடம்பெறுகின்றன. இதில் ஏழொத்து என்ற தாளம் - 104 பாசுரங்களிலும், ஒன்பதொத்து என்ற தாளம் - 22 பாசுரங்களிலும், இடையொத்து என்ற தாளம் 18 பாசுரங்களிலும், நடையொத்து என்ற தாளம் 17 பாசுரங்களிலும், மிடைந்தொத்து என்ற தாளம் 1 பாசுரத்திலும், முடுகினமிடைந்தொத்து என்ற தாளம் - 01 பாசுரத்திலும், மழுமுடித்தல் என்ற தாளம் 2 பாசுரத்திலும் ஆக 7 தாளங்களில் 165 பாசுரங்கள் இடம்பெறுகின்றன.

மேற்கூறியவாறு 7 தாளங்களின் பெயர்களை மட்டுமே அறிய முடிகிறது. மாறாக அந்தத் தாளங்களுக்குரிய அங்கங்களையோ அல்லது அவற்றின் செயல்முறைகளையோ குறித்து இதுவரை யாராலும் எந்த நூலிலும் விளக்கம் காணப்படவில்லை. இவை ஏழும் ஒத்து (ஒற்றுதல்) எனும் தாளச் செயல்முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதில் "ஏழொத்து தாளம்" என்பது ஏழு தட்டுக்களையும் ஒரு மடக்கையும் கொண்டது. இது (7+1=8) என்று எட்டு எண்ணிக்கைத் தாளமாகும். "ஒன்பதொத்து" தாளம் என்பது ஒன்பது தட்டுக்களையும் ஒரு வீச்சையும் கொண்ட (9+1=10) பத்து எண்ணிக்கைத் தாளமாகும். மூன்றாவதாக வரும் "இடையொத்து" என்ற தாளத்திற்கு பஞ்சமரபு நூல் 1 லகு, 1 அனுத்துரிதம், 1 துரிதம் என்று அங்கம் குறிப்பிட்டுள்ளது. கூத்தநூல் இதனை நடுவொற்று தாளம் என்றழைக்கின்றது. இது (4+1+2=7) ஏழு அட்சரம் கொண்ட தாளமாகும் (சதுஸ்ர ஜம்பை தாளம்) நான்காவதாக வரும் கடையொத்து தாளம் என்பது 1லகு, 1 துரிதம், 1 அனுத்துரிதம் என்று (4+2+1=7) ஏழு அட்சரம் கொண்ட தாளமாகும். ஐந்தாவதாக வரும் "மிடைந்தொத்து" என்ற தாளம் இருபக்கமும் அங்கங்கள் நெருங்கி வருகின்ற முறையில் அனுத்துரிதம், துரிதம், லகு, லகு, அனுதுரிதம் என்று (1+2+4+4+2+1=14) 14 அட்சரம் கொண்ட தாளமாகும். இதனை பஞ்சமரபு என்ற நூல் "செம்படைத்தாளம்" என்று கூறுகின்றது. ஆறாவதாக வரும் "முருகினமிடைந்தொத்து" என்ற தாளம் மேற்கூறிய செம்படைதாளத்தையே விரைவாக (இரண்டாவது காலத்தில்) போடும் தாளமாகும். எனவே இதில் 1+2+4+4+2+1, 1+2+4+4+2+1 என்று இருமுறை தாள அங்கங்கள் இடம்பெறும். ஏழாவதாக வரும் "மழுமுடித்தல்" என்ற தாளம் தோற்றங்கொள்ளாதவாறு வெறும் தட்டாகவே (அனுத்துரிதம்) போடும் தாளமாகும். கூத்த நூல் இதனை "கோடாரி" தாளம் என்றும் குறிப்பிடுகின்றது. மேலும் பஞ்சமரபு இதனை "நட்டுவன் கோடாரி எனவும் குறிப்பிடுகின்றது.

பிற்காலத்தில் தோன்றி கதாகாலட்சோபங்களில் இந்த தாளங்களே மூன்றடி உசித்தாளம், ஐந்தடி உசித்தாளம், ஏழடி உசித்தாளம் என்று வழக்கத்தில் வந்துள்ளது. இதில் ஏழடி உசித்தாளம் என்பது 7 தட்டும், 1 மடக்கும் கொண்ட (7+1=8) எட்டு அட்சர தாளமாகும். இதனையே இன்று சதுஸ்ர ஜாதி திரிபுடை (ஆதி) தாளம் என போடும் வழக்கமாக மாறியுள்ளது. சங்ககால சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் "மூன்றொத்துடைய மட்டதாளம்" என்பதே பிரபந்த காலத்தல் மூன்றொத்துத் தாளமாகவும், கதாகாலட்சேபத்தில் மூன்றடி உசித்தாளமாகவும் தியாகராஜர்காலத்தில் 4 அட்சரம் கொண்ட "தேசாதி", "மத்யாதி" தாளங்களாகவும் வழங்கப்படுகின்றது. இது இன்றுள்ள சதுஸ்ர ஏக தாளமாகும். மேலும் இக்காலத்தில் ஆதி

தாளத்தில் தான் பெரும்பாலான உருப்படிகள் உள்ளது போன்று திவ்விய பிரபந்த காலத்திலும் "ஏழொத்து" தாளத்தில் மிகு அதிகமான பாடல்கள் (104 பாசுரங்கள்) அமைந்துள்ளன. மிகவும் இடைஞ்சலான தாளத்தில் அதிக உருப்படிகள் அமையாதது போல "மழுமுடித்தல்" என்ற தோற்றம் காணமுடியாத தாளத்தில் ஒரே ஒரு பாடல் மட்டுமே அமைந்துள்ளதையும் காண முடிகிறது. (அங்கயற்கண்ணி.இ 2000 பக் 89, 90)

முடிவுரை.

பெருமாலின் புகழ் பாடுவதை குறிக்கோளாகக் கொண்டு ஆழ்வார்களினால் பாடப்பெற்ற பாசுரங்களாகிய நாலாயிரம் திவ்ய பிரபந்தங்கள் தமிழுக்கும், தமிழிசைக்கும் மிகப்பெரும் பொக்கிசமாக விளங்குகின்றமையை மேலே கூறப்பட்ட தகவல்களில் இருந்து ஓரளவு அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் இதனை முழுமையாக ஆய்வ் செய்து தமிழிசை அரங்குகளில் இப்பாடல்கள் முழுமையாக ஒலிக்குமாக இருப்பின் அது தமிழிசை வளத்தினை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பது உண்மையே.

**உசாத்துணை நூல்கள்**


அங்கயற்கண்ணி. 2000 இ இலக்கியத்தில் இசைக்கூறுகள் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 02 பதிப்பு

பெருமாள் ஏ. என் 1984 தமிழர் இசை Meiporul Achakam, Konnur high road, Medras 23. பதிப்பு ஒக்டொபர்

சுந்தரம். வீ.ப.கா 1994 தமிழிசையியல் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் பதிப்பு

ஸ்ரீசந்திரன்.ஜெ 2004 தமிழ் இலக்கிய வரலாறு வக்திமானன் பதிப்பகம் பதிப்பு ஜீன்